# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● ஆகஸ்ட் 26, 2023

Weekly E-paper ● August 19, 2023




# மோடி ஆட்சியின் ஊழல்

## ரூபாய் 7,500,000,000,000!

## மௌனமோ மௌனம், ஊடகங்கள்!

வழக்கறிஞர் இராம.வைரமுத்து

### வெள்ளியங்கிரி மலையா! ஆதி யோகியின் சிலையா?

சாரதாதேவி

### இது ஒதுக்கீடல்ல, முதலீடு!

தலையங்கம்

### “நீட்”– கல்வியில் நவீனத் தீண்டாமை!

சிற்பி செல்வராஜ்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● ஆகஸ்ட் 26, 2023 Weekly E-paper ● August 19, 2023


# மோடி ஆட்சியின் ஊழல்
# ரூபாய் 7,500,000,000,000 !
# மௌனமோ மௌனம், ஊடகங்கள்!

**வழக்கறிஞர் இராம.வைரமுத்து**

பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பா.ஜ.க ஆட்சியில் நிறைவேற்றப்பட்டுள்ள பாரத் மாலா திட்டம், துவாரகா விரைவுப்பாதைத் திட்டம், ஆயுஷ்மான் பாரத் திட்டம், சுங்கச்சாவடி வசூல், அயோத்யா மேம்பாடு த் திட்டம், கிராமப்புற மேம்பாடு அமைச்சகத்தின் ஓய்வூதியத் திட்டம், ஹெச்.ஏ.எல். விமான இன்ஜின் வடிவமைப்பு போன்ற ஏழு திட்டங்களில் ரூபாய் ஏழு லட்சத்து ஐம்பதாயிரம் கோடி (ரூ. 7,500,000,000,000) ஊழல் செய்திருப்பதாக அண்மையில் வெளியான மத்திய தலைமை கணக்குத் தணிக்கையாளரின் (சி.ஏ.ஜி - CAG) அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.






ஒன்றிய அரசின் பாரத்மாலா திட்டத்தில் ஒரு கிலோமீட்டர் சாலை அமைக்க 15.37 கோடி ரூபாய் என முடிவு செய்யப்பட்ட நிலையில் ஒப்பந்தப் பணியின் நிறைவில் ஒரு கிலோ மீட்டருக்கு 32.17 கோடி ரூபாய் ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

நாட்டின் முதல் எட்டுவழி விரைவுச் சாலையான துவாரகா நெடுஞ்சாலை கட்டுமானத்தில் ஒரு கிலோமீட்டருக்கு 18 கோடி ரூபாய் திட்டச் செலவு என்று நிர்ணயிக்கப்பட்ட நிலையில் ஒரு கிலோமீட்டருக்கு 250 கோடி ரூபாய் செலவழிக்கப் பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட ஒன்றிய அரசின் மருத்துவக் காப்பீடு திட்டமான “ஆயுஷ்மான் பாரத்” திட்டத்தில் 24.3 கோடி ஆயுஷ்மான் பாரத் மருத்துவக் காப்பீடு அட்டைகள் அளிக்கப்பட்டுள்ளது. இதில் சிகிச்சையின்போது இறந்த 88,670 நபர்களுக்குப் புதிதாகச் சிகிச்சை பார்த்ததாகக் காப்பீடு பெறப்பட்டிருக்கிறது. 7.5 லட்சம் மருத்துவக் காப்பீடு அட்டைகள் ஒரே செல்போன் எண்ணைக் கொண்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. வெறும் ஏழே ஆதார் அட்டை எண்களை வைத்து 4,761 காப்பீடு அட்டைகள் பதிவு செய்யப் பட்டுள்ளது.

ஐந்து சுங்கச்சாவடிகளில் ரேண்டமாக சர்வே செய்ததில் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் சுங்கச்சாவடிகளில் விதிமுறைகளை மீறி பயணிகளிடம் 132 கோடி ரூபாய் வசூல் செய்யப்பட்டது தெரிய வந்துள்ளது.

அயோத்யா மேம்பாட்டுத் திட்டத்தில் ஒப்பந்ததாரர்களுக்குப் பணி கொடுக்கும் போது குறிப்பிட்ட அளவு உத்தரவாதத் தொகை செலுத்தப்பட வேண்டும். 62.17 கோடி ரூபாய்க்கு ஒப்பந்தம் பெற்ற ஒரு ஒப்பந்ததாரர், உத்தரவாதத் தொகையாக 3.11 கோடி செலுத்த வேண்டிய நிலையில் வெறும் 1.86 கோடி ரூபாய் மட்டுமே செலுத்தியுள்ளார்.

தொடர்ச்சி அடுத்தப்பக்கம்...

முன்பக்கத் தொடர்ச்சி...

கிராமப்புற மேம்பாட்டு அமைச்சகத்தின் ஓய்வூதியத் திட்டத்துக்கான நிதியிலிருந்து 19 மாவட்டங்களில் தலா 5 இடங்களில் ஒன்றிய அரசின் விளம்பரப் பலகைகள் வைக்க 2.44 கோடி ரூபாய் செலவழிக்கப் பட்டுள்ளது.

ஹெச்.ஏ.எல். விமான இன்ஜின் வடிவமைப்பில் தவறு செய்ததன் மூலம் 154 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

சி.ஏ.ஜி அறிக்கையில் இடம்பெற்றுள்ள மேற்கண்ட தகவல்கள் ஒட்டுமொத்த நாட்டையே உலுக்கியுள்ளது. ஆனால் பெரும்பாலான ஊடகங்கள் இதைக் கண்டுகொள்ள வில்லை. ஊழலை எதிர்க்க வந்த உத்தமர் போல் தன்னைக் காட்டிக் கொண்ட அன்னா ஹசாரே போன்றவர்கள் தற்போது இருக்கும் இடமே தெரியவில்லை.

கடந்த ஐ.மு.கூட்டணி ஆட்சிக் காலத்தில் 2ஜி ஸ்பெக்ட்ரம் வழங்கப்பட்டதில் ரூ.1,76,000 கோடி ‘உத்தேச இழப்பு ‘ என்று சி.ஏ.ஜி அறிக்கையில் குறிப்பிட்ட போது ஊடகங்கள் இதை ஊதிப் பெரிதாக்கின. நீதிமன்றமோ தானாக முன்வந்து வழக்கை விசாரணைக்கு எடுத்தது. இறுதியில் நீதி வென்றது. பொய் வழக்குப் பொடிப் பொடியானது.

ஆனால் தற்போது உத்தேச இழப்பு என்றில்லாமல் நேரடியாக எவ்வளவு இழப்பு ஏற்பட்டுள்ளது என்று திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் ஜனநாயகத்தின் அனைத்துத் தூண்களும் மௌனம் காக்கின்றன.

“சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால் கோடாமை சான்றோர்க் கணி” என்ற அய்யன் திருவள்ளுவரின் வாக்கை மறந்து ஆட்சியாளர்களுக்கு அஞ்சியும், அவர்களைக் கெஞ்சியும் பிழைப்பு நடத்தும் ஊடகங்களின் உண்மை முகத்தை மக்கள் மன்றத்தில் தோலுரித்துக் காட்டுவோம்.

INDIA கூட்டணிக் கட்சிகளை ஊழல்வாதிகள் என்று குற்றம் சாட்டும் பா.ஜ.க, கடந்த பத்தாண்டுகளில் சி.ஏ.ஜி அறிக்கையில் இடம்பெற்றுள்ள ஏழு திட்டங்களில் மட்டுமின்றி பி.எம் கேர் நிதி, ரபேல் விமான ஊழல், வியாபம் ஊழல், 5ஜி ஊழல் எனப் பல்வேறு ஊழல்களைச் செய்துள்ளது. நாம் ஒவ்வொருவரும் ஒரு ஊடகமாக மாறி ஒன்றிய பாஜக அரசின் ஊழலை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தி அவர்களை ஆட்சியிலிருந்து விரட்டுவோம்!

●

# வெள்ளியங்கிரி மலையா! ஆதி யோகியின் சிலையா?

**சாரதாதேவி**



இந்த வாரம் நடைபெற்ற கோவை மாவட்டம், வெள்ளியங்கிரி மலைப் பழங்குடியினப் பாதுகாப்புச் சங்கத் தலைவர் முத்தம்மாள் அவர்களின் பொதுநல வழக்கின் மீதான விசாரணையில் சென்னை உயர் நீதிமன்றம், விதிகளை மீறிய கட்டுமானங்களை அகற்றிப் பழங்குடியினருக்குச் சொந்தமான நஞ்சை நிலங்களை மீட்டுத்தர உத்தரவிட்டுள்ளது.

அது மட்டுமல்லாமல், ஈஷா யோகா மையம் முறைப்படி எந்த அனுமதியும் வாங்கவில்லை என்பதை ஆய்வு செய்து, அதுகுறித்து கோவை நகரத் திட்ட இணைய இயக்குநர் சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளது.

சத்குரு என்று தன்னை அழைத்துக்கொள்ளும் ஜக்கி வாசுதேவ் 20 ஹெக்டேர் நிலப்பரப்பில் வெள்ளியங்கிரி மலைப் பகுதியை ஆக்கிரமித்து யோகா மையம், சிவன் கோயில் என்று 1992 முதல் கோவைப் பகுதியில் ஒரு சலசலப்பை ஏற்படுத்தி வந்துள்ளார். கோவையில் பா.ஜ.க. வளர்வதற்கு ஜக்கி வாசுதேவும், அவருடைய செல்வாக்கும், செல்வமும் பெரும் அளவில் உதவி புரிந்து வருகின்றன.

2017 ஆம் ஆண்டு ஒன்றியத் தலைமை அமைச்சர் திரு. நரேந்திர மோடியால் 112 அடி உயரமும், 147 அடி நீளமும், 82 அடி அகலமும் கொண்ட எஃகாலான சிவன் சிலை திறந்து வைக்கப்பட்டது. ஈஷா மையத்தின் இந்த ஆதியோகி சிலை திறக்கப்பட்ட போதே, அதற்கு பலத்த எதிர்ப்புகள் இருந்தன.

அங்கு அன்றாடம் நடத்தப்படும் களேபர நிகழ்வுகளும், ஆட்டம் பாட்டங்களும், அந்த மலைப்பகுதியின் அமைதியையும் இயற்கை எழிலையும் மட்டுமன்றி அங்கு வாழும் மலைப்பகுதி மக்களின் அன்றாட வாழ்வையும் சீரழித்துள்ளன.

உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி கங்காபுர்வாலா, மற்றும் நீதிபதி ஆதிகேசவலு ஆகியோர் நடத்திய விசாரணையில், தமிழக நகரமைப்பு திட்டமிடல் துறை தரப்பில், 20 ஹெக்டேரில் கட்டுமானம் செய்ய எந்த அனுமதியும் வாங்கியப் பதிவுகள் இல்லை எனவும் கூறி உள்ளது. ஆட்சியரின் தடையில்லாச் சான்று, மாசுக்கட்டுப்பாட்டு வாரியச் சான்று, மலைகள் பிரதேசப் பாதுகாப்பு ஆணையத்திடம் இருந்தும், தீயணைப்புத் துறையிடமிருந்தும் எந்த ஒரு சான்றும் வாங்கப்பட இல்லை எனப்போட்டுடைத்து உள்ளனர்.

இதற்கு எதிராக ஈஷா யோகா மையத்தின் சார்பில் எந்த ஆவணமும் கையளிக்கப்படாததால், உயர்நீதிமன்றம் இரண்டு வாரகால அவகாசம் கொடுத்து, இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளதாகத் தெரிகிறது. இந்தக் கால அவகாசத்தைப் பயன்படுத்தி மேல் முறையீடுக்கு அவர்கள் செல்ல வாய்ப்பிருக்கிறது.

அவர்களின் வளர்ச்சி, மதவாதப் பிற்போக்குத் தனங்கள், அதை வலுப்படுத்தும் செயல்களைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு அரசு உரிய நடவடிக்கைகளை உடனடியாக எடுத்து காக்க வேண்டும் .

●

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## இது ஒதுக்கீடல்ல, முதலீடு!

தலைவர் கலைஞரின் நூற்றாண்டை முன்னிட்டு மாணவர்களுக்கான உணவுத் திட்டத்தை, கலைஞர் படித்த திருக்குவளை 'ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி' யில் தொடங்கி வைத்தார் முதல்வர் மாண்புமிகு ஸ்டாலின் அவர்கள்.

அப்போது பேசிய அவர் இந்தத் திட்டத்திற்கு ஒதுக்கும் நிதி "ஒதுக்கீடு அல்ல, முதலீடு" என்று நெகிழ்ச்சியுடன் சொன்னார். இதன் மூலம் 31 ஆயிரம் அரசுப் பள்ளிகளில் 17 லட்சம் மாணவர்கள் பயன் பெறுவார்கள்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக வருண பேதமாக சூத்திரர்களுக்கு மறுக்கப்பட்டக் கல்வித் தடையை உடைத்து எறிந்தது திராவிட இயக்கம், தந்தை பெரியார்.

இன்று கல்விக் கூடங்களில் சாதிக்குரிய கல்வி என்றும், வேலை வாய்ப்புகளில் சாதிக்குரிய வேலை என்றும் எதுவும் கிடையாது. சமத்துவத்தை நோக்கிச் செல்கிறார்கள் மக்கள். ஆனால் கோயில்களில் அப்படியில்லை. இதில் 'அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ' என்ற உணர்வை முதல்வரின் பேச்சில் காண முடிந்தது.

தமிழ்நாட்டில் சிறப்பாகக் கல்வியின் தரத்தை முன்னெடுத்து நடைமுறைப் படுத்துவதைப் பொறுக்க முடியாமல் தகுதித் தேர்வு, நீட் தேர்வு என்ற தடைச்சுவர்களை எழுப்பும் விபீஷணர்களுக்கு இங்கு வேலையில்லை என்று சொல்லும் முதல்வர், இதன் மூலம் இந்தப் பிஞ்சுக் குழந்தைகள் நாளை உயர் கல்விக்குப் போகும்போது எந்தத் தடையும் இருக்காது என்பதை உணர்த்தி இருக்கிறார்.

கடமைக்காகச் செய்வது வேறு, கடமையை உணர்ந்து செய்வது வேறு. மாணவர்களுக்கான இவ்வுணவுத் திட்டம் தமிழ்நாடு முழுவதும் விரிவுபடுத்துவது மனநிறைவாக இருப்பதாகக் கூறுகிறர்.

திருக்குவளையில் இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்த பின்னர் அந்தக் குழந்தைகளோடு அமர்ந்து இந்தப் 'பெரிய குழந்தை' யும் சாப்பிடும் போது, "உன் பெயர் என்ன? "எந்த வகுப்பு படிக்கிற " " முதல்ல ஸ்வீட் சாப்பிடு" "நல்லாருக்கா" என்று குழந்தைகளுடன் பேசிக் கொண்டு சாப்பிடும் போது, ஒரு குழந்தையிடம் "என்பேரு தெரியுமா?" என்று கேட்க, அந்தக் குழந்தை "ஸ்டாலின் " என்று சொன்னபோது முகமலர்ந்த அவர், முதலமைச்சரா இல்லை 'பெரிய எல்.கே.ஜி மாணவரா' என்று உருக வைத்துவிட்டார்.

கல்வியில் தமிழ் நாட்டைச் சிறக்கச் செய்து கொண்டு இருக்கும் தமிழ்நாடு அரசைப் பாராட்டுவோம், நம் முதல்வரை வாழ்த்துவோம்.

●

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

ஆசிரியர் குழு:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,

தொலைபேசி: 044-2472 6408

## பொதுச் செயலாளர் சுற்றுப் பயணம்




22-08-2023, மாலை திருச்சி திமுக மாநாடு

25-08-2023, மாலை நூல் வெளியீடு, கும்பகோணம்.

26-08-2023 மாலை, பேரவைப் பயிலரங்கம் சென்னை.

27-08-2023 காலை, புவியரசன் 75 ஆம் பிறந்த நாள் விழா, திருத்தணி.

**- எட்வின்**
தலைமை நிலையச் செயலாளர்



# "நீட்" - கல்வியில் நவீனத் தீண்டாமை! "வாக்கு" - அதை விரட்டும் ஆயுதம்!!

**சிற்பி செல்வராஜ்**

இந்திய ஒன்றியத்தில் அனைத்து மாநிலங்களும் நீட் தேர்வு என்று சொல்லக்கூடிய மருத்துவக் கல்விக்கான தகுதித் தேர்வை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் தமிழ்நாடு மட்டும் ஏன்ஏற்க மறுக்கிறது என்று பாஜக, அது சார்ந்த ஒருசில கட்சிகள், அமைப்புகளால் பேசப்படுகின்றன.

இந்திய ஒன்றியத்தில் இருக்கக்கூடிய அனைத்து மாநிலங்களின் மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை, உள்கட்டமைப்பு வசதி, கல்வியின் தரம் என்று கணக்கிட்டுப் பார்த்தால், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய 38 அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கு இணையாக எந்த மாநிலத்திலும் இல்லை.

நீட் தேர்வு எழுதித்தான் மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்க வேண்டும் என்கிற நிலை வருவதற்கு முன்னால் மாணவர்கள் 12 ஆம் வகுப்புத் தேர்ச்சியின் மதிப்பெண் அடிப்படையில் மருத்துவப் படிப்புக்குச் சென்றார்கள்.

ஆனால் இன்று அப்படியில்லை. 12ஆண்டு காலம் பள்ளியில் படித்தும், நல்ல மதிப்பெண்களில் தேர்ச்சி பெற்றும் கூட, அதைக் கணக்கில் எடுக்காமல் ஒதுக்கித் தள்ளி விட்டு, சம்பந்தம் இல்லாமல் CBSE பாடத்திட்டத்தின் அடிப்படையில் நீட் தேர்வு எழுத வேண்டும் என்றால், கல்வித் திட்டத்தில் ஒரு சர்வாதிகாரத்தைப் புகுத்துகிறார்கள் என்றுதானே சொல்ல வேண்டும் ?

நீட் தேர்வில் 400 மதிப்பெண் பெற்று இருக்கும் மாணவர் கல்லூரியில் சீட்டு கிடைக்காமல் வெளியே நிற்கிறார். ஆனால் பணம் படைத்தவர்கள் 300 மதிப்பெண் இருந்தால் கூடத் தனியார் கல்லூரியில் இடம் பெற்று விடுகிறார்கள். அதற்காகப் பெற்றோர் லட்சங்களில் செலவு செய்ய வேண்டியுள்ளது.

கிராமப்புற மாணவர்கள், பிற்படுத்தப்பட்ட, பட்டியலின ஏழை மாணவர்களின் மருத்துவக் கனவுகள் இவைகளினால் நொறுங்கி விடுகின்றன. அத்துடன்

20 மாணவர்கள் தற்கொலை செய்து இருக்கிறார்கள். ஒரு மாணவனின் தந்தையும் உயிரை விட்டிருக்கிறார்.

இப்படிப்பட்ட கொடிய நீட் தேர்வுக்கு எதிராக 20-08-2023 அன்று தி.மு.கழகம், தமிழ்நாடு முழுவதும் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியது.

அதே நாளில் மதுரையில் மாநாடு நடத்திய எடப்பாடி பழனிச்சாமி பேசுகிறார், 2019 ஆம் ஆண்டு மத்தியில் காங்கிரஸ் ஆட்சியாம், தமிழ்நாட்டில் தி.மு.க.ஆட்சியாம், அப்போதுதான் நீட் தேர்வு தமிழகத்திற்கு வந்ததாம். எடப்பாடி குறிப்பிடும் அந்த ஆண்டில் டில்லியில் மோடியும், தமிழ்நாட்டில் எடப்பாடியும் தான் அமைச்சர்களாக இருந்தார்கள் என்பது கூட அவருக்கு எப்படித் தெரியாமல் போனது? அன்று அதிமுகவின் ஓ.பன்னீர்செல்வத்தின் மகன் ரவீந்தரநாத்தின் ஒரே ஓட்டால்தான் நீட் தமிழ் நாட்டில் நடைமுறைக்கு வந்தது. எடப்பாடி சொல்கிறார் அதிமுக நீட்டை எதிர்க்கிறதாம்.

வள்ளுவர் கோட்டத்தில் நீட்டுக்கு எதிராக போராட்டத்தில் இருந்த மாண்புமிகு அமைச்சர் உதயநிதி அவர்கள் எடப்பாடியை நோக்கி ஓர் அறைகூவல் விடுத்தார்.

"நீங்கள் நீட் தேர்வை எதிர்ப்பது உண்மையானால், வாருங்கள் நாம் டில்லிக்குப் போவோம். பிரதமர் வீட்டின்முன் போராட்டம் நடத்துவோம். அப்படி நீங்கள் வந்தால், போராடினால் நீங்கள் சொல்வதை நான் கேட்கிறேன்" என்ற ஓர் அழைப்பை விடுத்தார் எடப்பாடியை நோக்கி.

அவ்வளவுதான்! நடிகர் சத்தியராஜுவுக்குப் போட்டியாக, யாரோ சிலர் கொடுத்த 'புரட்சித் தமிழன்? ' என்ற பட்டத்தை வாங்கிக் கொண்டு, நீட்டுக்கு எதிராக ஒரு தீர்மானம் கூடப் போடாமல், அமைச்சர் உதயநிதியின் போராட்ட அழைப்புக்குப் பதில் கூறாமல் மாயமாகி விட்டார் எடப்பாடி.

உண்மையில் நுழைவுத் தேர்வு என்கிற பெயரில் ஒரு நவீனத் தீண்டாமையைக் கல்வியில் நுழைத்து மாணவர்களின் வாழ்க்கையைப் புதைகுழிக்குள் தள்ளுகின்ற பாஜக மோடி அரசும், அதற்கு அடிமை வேலை பார்க்கும் அதிமுகவின் எடப்பாடி அரசும் இனி ஆட்சியைப் பிடிக்கத் தகுதியற்றவைகள்.

மாநிலத்தில் ஆட்சியில் இருந்தாலும் மக்களுக்காக மத்திய அரசை எதிர்த்துப் போராட்டம் நடத்துகிறது தி.மு.கழகம்.

தி.மு.கழகத்தின் முன்னெடுப்பில் அரும்பியிருக்கும் I.N.D.I.A. கூட்டணி, 2024 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் வெற்றி பெறுவதன் மூலமே

பாசிசத்தை விரட்டி, மக்களாட்சியை மலர வைக்க முடியும்.

அதற்கானப் பணிகளைச் செய்வோம்.

இன்றே செய்வோம்! இடைவிடாது செய்வோம்!!

